உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 24.06.2026 • மலர் 04 • இதழ்: 175 • புதன்கிழமை • Edition : Nagercoil • 24.06.2026 • Vol : 04 • Issue : 175 • Page : 4 • Rs. 5/-

# மம்தா பானர்ஜி அதிரடி நீக்கம்

## திரிணாமூல் அதிருப்தி தலைவர்கள் நடவடிக்கை



கொல்கத்தா, ஜூன் 24

மே.வங்க முன்னாள் முதல்வரும், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் நிறுவனருமானமம்தாபானர்ஜியை கட்சித் தலைவர் பதவியிலிருந்துநீக்கியுள்ளதாக ரிதப்ரதா பானர்ஜி தலைமையிலான அதிருப்தி குழுவினர் அறிவித்தனர்.

கொல்கத்தாவில் உள்ள ஒரு தனியார் விடுதியில், ரிதப்ரதா பானர்ஜி தலைமையில் திரிணமூல் காங்கிரஸின் அதிருப்தி எம்.எல். ஏக்கள் மற்றும் நகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் (கவுன்சிலர்கள்) அவசர ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. மாலை 4 மணியளவில் நடைபெற்ற இந்தச் சிறப்பு கூட்டத்தில் கொல்கத்தா, பஹரம்பூர்,

உத்தர்பாரா, ஸ்ரீராம்பூர், டம் டம் உள்ளிட்ட பல்வேறு நகராட்சிகளைச் சேர்ந்த சுமார் 40 க்கும் மேற்பட்ட கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தின் முடிவில், அகில இந்திய திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் 10 பேர் கொண்ட புதிய தேசிய செயற்குழு ஒருமனதாக உருவாக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கூட்டத்தில் ரிதப்ரதா பானர்ஜி, சந்திபன் சஹா மற்றும் கொல்கத்தாவின் முன்னாள் மேயர் ஃபிர்ஹாத் ஹக்கீம் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மம்தா நீக்கப்பட்டுள்ளார். புதிய தலைவராக அருப் ராய் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இக்குழுவில் உள்ள மற்ற தலைவர்களுக்கும் முக்கியப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## தமிழக முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு உணவு வழங்கிய ஆச்சிபட்டி நிர்வாகிகள்



கோவை ஜூன்:24

தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அக்கட்சியின் தொண்டர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு செய்து வருகின்றன.

அந்த வகையில் பொள்ளாச்சி அடுத்த ஆச்சிபட்டி ஊராட்சி ஒன்றிய நிர்வாகிகள் சி.டி.சி மேடு பேருந்து நிலையம் அருகில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு உணவு வழங்கியும், நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர்.

நிகழ்வை மதுவிலக்கு மற்றும் ஆயத்த தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார், பொள்ளாச்சி நகரச் செயலாளர் தொண்டரணி அமைப்பாளர் பாலாஜி தலைமையிலும் பொள்ளாச்சி வடமேற்கு ஒன்றிய செயலாளர் வெங்கடேஷ் அவர்கள் முன்னிலையில் ஆட்சி பட்டி ஊராட்சி ஒன்றிய நிர்வாகி முருகேசன் முத்துலட்சுமி அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

ஒன்றிய கழக செயற்குழு உறுப்பினர் நாகராஜ், மாவட்ட தொண்டரணி இணைச் செயலாளர் குமார், அரவிந்த் லீலா பிரகாஷ், கிளைச் செயலாளர் கிருபாகரன் ஆச்சிபட்டி நிர்வாகிகள் வெங்கடாசலம், சரஸ்வதி, அருள், ஹரிகரன், அபிநவ் சூர்யா, காளிதாஸ் போன்ற த.வெ.க. தொண்டர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.



கோயம்புத்தூர் மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புதுறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள் தமிழ்நாடுமுதலமைச்சரின்திட்டங்கள்மற்றும்சாதனைகள் குறித்து புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



## பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய அகில இந்திய மக்கள் நலக் கழகம் மற்றும் நிமிர் குழுவினர்

நாகர்கோவில் ஜூன் 24

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் ஸ்டாலின் தொடங்கி வைத்த 'நிமிர்' திட்டக் குழுவினருடன் அகில இந்திய மக்கள் நலக் கழகத்தினர் இணைந்து பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

அகில இந்திய மக்கள் நலக் கழகத்தின் மாவட்டத் தலைவரும், மாநிலத் துணைத் தலைவருமான வழக்கறிஞர் சதீஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, நாகர்கோவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியன் முன்னிலையில் ஒழுகினசேரி பகுதியில் அமைந்துள்ள கலைவாணர் என்.எஸ்.கே. அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இவ்விழாவில், அப்பள்ளியில் பயிலும் மாணவமாணவிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், அகில இந்திய மக்கள் நலக் கழகத்தின் நிர்வாகிகள் மற்றும் 'நிமிர்' குழுவினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



### கிருஷ்ணகிரி மாவட்டம் மணவாரனப்பள்ளி கிராமத்தில்

## பெண் குழந்தைகளுக்கான சிறப்பு கிராம சபை விழிப்புணர்வு கருத்தரங்கு

கிருஷ்ணகிரி, ஜூன் 24

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி ஒன்றியத்திற்கு உட்பட்ட மணவாரனப்பள்ளி கிராமத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மற்றும் சமூக அமைப்புகளுடான பெண் குழந்தைகளுக்கான சிறப்பு கிராம சபை விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது , கிராமிய பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செந்தில் ராஜா தலைமையில் நடைப்பெற்ற இந்த விழிப்புணர்வுக் கூட்டதிற்கு சிறப்பு அழைப்பாளாக மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி சக்தி சுபாசினி கலந்துக்கொண்டு குழந்தைகளின் உரிமைகள் குறித்தும்,பெண் கல்வியின் முக்கியதுவம் குறித்தும், குழந்தை திருமணங்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் மருத்துவம், சுகாதாரம் மற்றும் குழந்தை திருமணம் ஆகிய தலைப்புகளில் விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். மேலும் இந்த விழிப்புணர்வு நிகழ்சியில் மணவார்னபள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவிகள் 30 பேர் பங்கேற்று பலனடைந்தனர் இறுதியில் பங்கேற்ற அனைவருக்கும்சான்றிதழ்வழங்கப்பட்டது.இந்தவிழிப்புணர்வு நிகழ்ச்சியின் போது பள்ளியின் தலைமை ஆசிரியர் வீரமணி வழக்கறிஞர் மணவார்ணப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆறுமுகம், ஆர், பி. எஸ். கே, மருத்துவர் விஜயலட்சுமி மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் . மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் என பலர் கலந்துக் கொண்டனர்.

## மார்பகத் தோற்றம் மாறாமலே பெரிய மார்பகக் கட்டி அகற்றி நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனை டாக்டர்கள் அபாரம்

நாகர்கோவில், ஜூன் 24–

நாகர்கோவில் கிம்ஸ் ஹெல்த் மருத்துவமனையில், 45 வயது பெண்ணுக்கு சுமார் ஐந்து வருடங்களாக வளர்ந்து வந்த ஃபில்லோட்ஸ் மார்பகக் கட்டியை மார்பகத் தோற்றம்மாறாமலேமுழுமையாகஅகற்றி வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. டாக்டர் லாலா ராபின் (புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர்) மற்றும் டாக்டர் பெலிக்ஸ் கார்டீலியா (பிளாஸ்டிக், அழகு மற்றும் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணர்) இந்த புதியவகை அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்தனர். சிறியதாக தோன்றிய மார்பகக் கட்டியை சுமார் ஐந்து வருடங்களாக எந்த வகையானபரிசோதனையோ,சிகிச்சையோ மேற்கொள்ளாமல், மார்பகத்தை அகற்றி விடுவார்கள் என்ற பயத்துடனும், மனசஞ்சலத்துடனும் வாழ்ந்து வந்த பெண்ணுக்கு, நாகர்கோவில் கிம்ஸ் ஹெல்த் மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணரை அணுகியதும் முழுமையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனைகளின் முடிவில் அவருக்கு ஃபில்லோட்ஸ் வகையான மார்பகக்கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. அந்த கட்டியின் அளவு சுமார் 10 செமீ அளவு இருந்ததால், கட்டியை அகற்றும்போது ஏறத்தாழ பாதி மார்பகம் அகற்றும் நிலை ஏற்பட்டது. அதனால் அவர்களுக்கு அழகு மற்றும் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சையோடு சேர்ந்து ஆன்கோபிளாஸ்டிக் என்னும் புதிய முறையில் அறுவை சிகிச்சையை பிளாஸ்டிக், அழகு மற்றும் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணர் இணைந்து செய்ய திட்டமிடப்பட்டது.

மேலும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்போது கட்டி முழுமையாக அகற்றப்பட்டதா என்பதை கண்டறிய, ஃப்ரோசன் செக்ஷன் என்னும் திசு ஆய்வு முறையும் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை செய்யும்போது மார்பகக் கட்டியை அகற்றி, திசு ஆய்வில் அது முழுமையாக அகற்றப்பட்தை அறிந்ததும், மார்பகத்தின் தோற்றத்தை புனரமைப்பு செய்ய, ஆன்கோப்ளாஸ்டிக் முறையில், மார்பகத்தை வடிவமைத்து மறுபுறம் மார்பக அளவிற்கே மறு உருவாக்கம் செய்யப்பட்டது.

அறுவை சிகிச்சைக்கு பின்பும் எந்த சிக்கலும் இல்லாமல், வடிவமைத்த மார்பகத்தில் எந்த பிரச்சனைகளும் இல்லாமல் அந்த பெண் குணமடைந்து மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். சிகிச்சை குழுவில் டாக்டர்கள் பாலாஜி, பினிட்டா ஷெரின் தீவிர மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் செவிலியர் குழுவும் இணைந்திருந்தனர். மார்பகத்தில் ஏற்படும் கட்டிகளை அகற்ற எப்போதும் முழு மார்பகத்தை அகற்ற வேண்டிய நிலை தற்போது இல்லை எனவும், கட்டிகளின் தன்மையை சரியான நேரத்தில் கண்டறிந்தால், மார்பகத்தை அகற்றாமல் சிகிச்சைகள் அளித்து முழுமையாக குணமடைய ஆன்கோபிளாஸ்டிக் அறுவை சிகிச்சை தற்போது சிறந்த முறையில் கிம்ஸ்ஹெல்த் நாகர்கோவில் செய்யப்படுவதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

## மக்களை தேடி மருத்துவத் திட்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை: கலெக்டரிடம் புகார்





நாகர்கோவில், ஜூன்.24

குமரி மாவட்டத்தில் மக்களை தேடி மருத்துவ திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 2 மாத ஊதியம் வழங்கப்படவில்லை எனவும் அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என கலெக்டரிடம் சங்கத்தினர் மனு அளித்துள்ளனர். இது குறித்து மக்களை தேடி மருத்துவ ஊழியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, பொதுச் செயலாளர் மகாலட்சுமி ஆகியவர் குமரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ் துறையின் மக்களைத் தேடி மருத்துவத் திட்ட ஊழியர்கள் வீடுகளுக்கு சென்று ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு பரிசோதித்து மருந்து பெட்டகம் வழங்குதல் போன்ற பணிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளாக மாதம் ரூ.5, 500 ஊக்கத்தொகை பெற்று பணி செய்து வருகின்றனர். மேலும் இவர்கள் அனைத்து பணிகளிலும் ஈடுபடுத்தப் படுகின்றனர். 2 மணி நேரம் பணி என்று பணி அமர்த்தி விட்டு 8 மணி நேரத்திற்கு மேல் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த அரசு பொறுப்பில் இருந்த போது ஒப்பந்த ஊழியர்கள் 42 ஆயிரம் பேருக்கு ஊதிய உயர்வு வழங்கப் படும் என்று அறிவி க்கப்பட்டது. ஆனால் இதுவரை வழங்கப்படவில்லை. இந்த நிலையில் தற்போது புதிய அரசு பொறுப் பேற்றுள்ளது. பெண்கள் நல அரசாக தங்களை அடையாளப்படுத்தும் தமிழக அரசு உடனடியாக இந்த ஊழியர்களுக்கு மாதம் ஒன்று ரூ. 15,000 ஊதியம் வழங்குவதுடன் பணி உத்திரவாதத்தினை ஏற்படுத்த வேண்டும். மேலும் கடந்த 2 மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. இது குறித்து சங்கத்தின் சார்பில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரிடம் மனு கொடுக்கப் பட்டது. அதன் பேரில் கடந்த 2. 6. 2026 அன்று ஊதியம் வழங்க மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ 5 கோடிக்கான காசோலை அனுப்பப்பட்டது. ஆனால் தற்போது வரை ஊழியம் வழங்கப்படவில்லை. இதனால் ஊழியர்கள் குடும்ப செலவுக்கு பணம் இல்லாமல் திண்டாடி வருகின்றனர்.

எனவே மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அதிகாரிகள் மீது உரிய விசாரணை நடத்த வேண்டும், நிர்வாகத்தில் நடைமுறைக்கு மாறாக ஊழியர்கள் மீது வேலைப்பளு அதிகரிப்பதை உடனே நிறுத்த வேண்டும், இது தொடர்பான எழுத்துப்பூர்வமான உத்தரவை அனைத்து மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதி தமிழக முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு சேலம் தெற்கு மாவட்டம் தவெக சார்பாக டாக்டர் கே.கே கோகுல் மற்றும் க.மணிமாறன் ஆகியோர் பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கினார்கள்.



தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்டு வரும் மினி ஜவுளிப் பூங்காவின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு மகாஜன்.

# தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



தஞ்சாவூர் ஜூன் 24

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ரேவதி தலைமையில் நடைபெற்றது

கூட்டத்தில் இலவசவீட்டுமனைபட்டா ,முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை ,பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 510 மனுக்களை மக்கள் கலெக்டரிடம் வழங்கினார்கள் இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள் ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர் களுக்கு கலெக்டர் ரேவதி உத்தர விட்டார் இதனைத் தொடர்ந்து சத்துணவு திட்டத்தின் கீழ் திருவிடைமருதூர் வட்டம் திருச்சேறை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கருணை அடிப்படையில் சீதளாதேவி என்பவருக்கு பணி நியமன ஆணையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் துளசிராமன் என்பவருக்குகாதொலிக்கருவியும், வருவாய்த் துறை சார்பில் வல்லத்தைச் சேர்ந்த சுந்தரி என்பவருக்கு விலையில்லா வீட்டு மனை பட்டாவினையும் மாவட்ட கலெக்டர் ரேவதி வழங்கினார்.

தொடர்ந்து மாற்றுத்திறனாளி கள் நலத் துறை சார்பில் பெங்களூரில் நடைபெற்ற தேசிய அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான பாரா நீச்சல் போட்டியில் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த மாதா மாற்று த்திறனாளிகள் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்கள் மாவட்ட கலெக்டரிடம் சந்தித்து வாழ்த்துபெற்றனர்இக்கூட்டத்தில்மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், உதவி கலெக்டர் (பயிற்சி) சுபாஷ் கார்த்திக் ,துணை கலெக்டர் (பயிற்சி) கமலேஷ் ,மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) பொன்னியின் செல்வ ன், சமூக பாதுகாப்புத் திட்ட தனி துணை கலெக்டர் சௌமியா மற்று ம் அனைத்து துறை அலுவலர் கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கிருஷ்ணகிரி சார்பாக, 26.06.2026 அன்று சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, ஸ்டார்ட் ரன் ஸ்டாப் ன்றுக்ஸ் 2026" விழிப்புணர்வு ஓட்டம் நடைபெறுவது குறித்து மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .கோ.சி.அனிதா, உதவி ஆட்சியர் பயிற்சி . சாய்சைதன்யா ஜாதவ் உதவி ஆணையர் ஆயம் .பழனி, மாவட்ட விளையாட்டு நல அலுவலர் .நடராஜ முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தமிழக முதலமைச்சர் விஜய் பிறந்த நாள் விழா

# பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



தேனி, ஜூன் 24

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு பெரியகுளம் நகர் 14 மற்றும் 15 வது வார்டு தவெக நிர்வாகிகள் சார்பில் கழக அடிப்படை உறுப்பினர் முருகேஸ்வரி கார்த்திக், குழந்தைச் செல்வங்கள் புரவலர் சிவானி கார்த்திக், நிவேதிதா, நிவேதிகா, ஆகியோரது ஏற்பாட்டில் பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்புகள் மற்றும் பிஸ்கட் பாக்கெட்டுகள் வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்.பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாவலராக விளங்கி வரும் மக்கள் சக்தி நாயகர் முதலமைச்சர் விஜய் அங்கிள் பிறந்தநாள் விழாவை இனிப்புகளுடன் நாங்கள் கொண்டாடி வருவது ரொம்ப மகிழ்ச்சியாக உள்ளது என குழந்தை செல்வங்கள் தெரிவித்தனர். இந்நிகழ்வில் நகர துணை செயலாளர் மதன்,கழக உறுப்பினர்கள், கே எஸ் குபேந்திரன், பொறியாளர் ராமநாதன், இஸ்மாயில், பிரபு,பால சுப்பிரமணி, முகிலன் பனையடியான், பால்பாண்டி, விடுதலை சிறுத்தைகள் கட்சி பெரிய குளம் நகர துணைச் செயலாளர் மணிகண்டன் மற்றும் த வெ க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டத்தில் வேலைவாய்ப்புகளையும், தொழில் வளர்ச்சியையும் ஏற்படுத்தும் வகையில் தருமபுரி சிப்காட் வளாகத்தில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த கூடுதல் நிதி ஒதுக்கவும், புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கக் கோரியும் தமிழக தொழில்துறை அமைச்சர் ச.கீர்த்தனாவை தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணி நேரில் சந்தித்து மனு அளித்தனர்.

# திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோவிலில் 4.வது வருஷாபிஷேகம் நடந்தது



திருவட்டாறு, ஜூன். 24

திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோவிலில் 418 ஆண்டுகளுக்குப்பின்னர் கடந்த ஆண்டு 2022ம் ஆண்டு ஆனி மாதம் உத்தரம் நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடந்ததால் , அதை கணக்கில் கொண்டு, ஆனிமாத உத்தரம் நட்சத்திர நாளான நேற்று 22ம் தேதி வருஷாபிஷேகம் நடைபெற்றது.

108 வைணவத்திருப்பதிகளில் ஒன்றானதும், நம்மாழ்வாரால் பாடல் இயற்றப்பெற்ற திருத்தலமான திருவட்டார் ஆதிகேசவப்பெருமாள் ஆலயத்தில் கும்பாபி ஷேகத்துக்குப்பின்னர் கோவிலில் சாமிதரிசனம் செய்ய வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாள் தோறும் அதிகரித்து வருகிறது. கோவில் நடை திறப்பைத்தொடர்ந்து நிர்மால்ய தரிசனம் நடந்தது.

தொடர்ந்து சுவாமி கருவறையில் இருந்து ஒற்றைக்கல் மண்டபத்தில் எழுந்தருளல், நவகலச அபிஷேகம், ஆகியன நடந்தது. தொடர்ந்து உதயமார்த்தாண்ட மண்டபத்தில் 25 கலசங்களுடன் சிறப்பு பூஜை நடந்தது. பூஜையை கோகுல் தந்திரி நடத்தினார். பின்னர் ஆதிகேசவப்பெருமாள் மற்றும் பூதேவி, ஸ்ரீதேவிக்கு 25 கலசங்களில் பூஜை செய்யப்பட்ட புனித நீரால் சிறப்பு அபிஷேகம், கிருஷ்ண சுவாமி, ஐயப்ப சுவாமி, குலசேகரப்பெருமாள் சன்னதியில் நவ கலச அபிஷேகம், தீபாராதனை ஆகியன நடந்தது.மதியம் ஸ்ரீபலி எழுந்தருளல், ஸ்ரீபூதபலி, அன்னதானம் மாலையில் அலங்காரதீபாராதனை ஆகியனநடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் பெண்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

## எட்டயபுரத்தில் தமிழக வெற்றி கழகம் சார்பில்

# தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாள் விழா



எட்டயபுரம் ஜூன் 24.

தூத்துக்குடிமாவட்டம்எட்டயபுரம்மனநலகாப்பகத்தில் தமிழக வெற்றி கழகத்தினர் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் விஜயகுமார் தலைமையில் 100 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினர்.

இந்த நிகழ்வில் எட்டயபுரம் மனநல காப்பக நிர்வாகி ராஜேஸ்வரி, எட்டயபுரம் நகர செயலாளர் கனகராஜ், துணைச் செயலாளர் பாலாமணி, ஆற்றங்கரை கிளை செயலாளர் முருகன், தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் கார்த்திகா, வன்னியராஜ், மற்றும் நகர நிர்வாகிகள், தமிழக வெற்றிகழகத்தொண்டர்கள்எனபலர்கலந்துகொண்டனர்.

## கோவையில்

# முதல்மைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



கோவை ஜூன்:24


கோவை மாநகர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் அறிவுறுத்தலின்படி தமிழக முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு, கோவை தெற்கு 48 வது வார்டு புலியகுளம் பகுதி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி மற்றும் அன்னதானம் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் இணைச் செயலாளர் மைக்கேல்,துணைச் செயலாளர் உன்னிகிருஷ்ணன்,தெற்கு தொகுதி பொறுப்பாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர் ராம்குமார்,பகுதி ஜான் மற்றும் 48வது வார்டு செயலாளர் பிரேம்குமார் மற்றும் 48வது வார்டு நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு முதலமைச்சர்க்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# ஒருங்கிணைந்த டிப்பர் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம்



கோவை ஜூன்:24

கோவை மாவட்ட ஒருங்கிணைந்த டிப்பர் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் புதிய பொறுப்பாளர் கள் கூட்டத்தில் நியமிக்கப்பட்டனர்.மேலும்இக்கூட்டத்தில்பல்வேறுகோரிக்கைகளை தமிழக முதல்வருக்கு வைத்தனர், மேலும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் தலைவர் பாலகிருஷ்ணன் செயலாளர் வி.கண்ணன் (எ) கருப்புசாமி,பொருளாளர் டி.கங்காதரன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.என்பது குறிப்பிடத்தக்கது.



# மேகதாது அணை விவகாரம் புதிய நடுவர் மன்ற கோரிக்கையை திரும்ப பெற வேண்டும்

## தமிழக அரசுக்கு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தஞ்சாவூர் ஜூன் 24

மேகதாது அணை விவகாரத்தில் புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று சேர்க்கப்பட உள்ள திருத்தத்தை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது

தஞ்சாவூரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் சாமி . நடராஜன் செய்தி யாளர்களுக்கு பேட்டி அளித்தார் .அப்போது அவர் கூறியதாவது:

கர்நாடக அரசு காவிரியில் மேகதாது புதிய அணை கட்டுவதை தடுக்க வலியுறுத்தி, தமிழக சட்டப் பேரவையில் அனைத்து கட்சிகளி ன் ஆதரவோடு திர்மானம் நிறை வேற்றப்பட்டதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்த திர்மானத்தில் எதிர்க்கட்சித் தலை வர் உதயநிதிஸ்டாலின் முன்மொழி ந்த புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற திருத்தம் முழுமை யாக வாசிக்கப்படாமலேயே முதலமைச்சர் விஜய் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு ள்ளது

இந்த திருத்தத்தை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது .நதிநீர் பகிர்வு க்கான தீர்வுகள் ஏற்கனவே இருக்கு ம்போது அணை கட்டுவதற்காக புதிய நடுவர் மன்றம் கூறுவது காவிரி பிரச்சனையை மீண்டும் பின்னோக்கி இழுத்துச் செல்லும் ஒரு தவறான முன்னெடுப்பாகும் எனவே புதிய நடுவர் மன்ற கோரிக்கையை திரும்ப பெற வேண்டும்

தமிழக அரசு புதிய நடுவர் மன்ற கோரிக்கையை தவிர்த்து கர்நாட காவில் அணைக் கட்டும் முயற்சி யை தடுக்க சட்டபூர்வமான, ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் . இவ்வாறு அவர் கூறினார்

போட்டியின் போது மாவட்ட செயலாளர் என் வி கண்ணன், மாவட்ட தலைவர் செந்தில்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



# தமிழ்நாடு முதலமைச்சர் 52 வது பிறந்தநாள் அன்னதான விழா

திருப்பூர் ஜூன்:24

தமிழக வெற்றிக்கழகம் திருப்பூர் மாநகர மாவட்ட தெற்கு சட்டமன்ற தொகுதி சார்பில் கருவம்பாளையம் 43 ஆம் வார்டு பகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் C.ஜோசப் விஜய் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அசைவ உணவு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநகர் மாவட்ட செயலாளர் S. பாலமுருகன் அன்னதானத்தை துவக்கி வைத்தார்.

பகுதி செயலாளர் R.அர்ஜுன் தலைமையில் கருவம்பாளையம்வார்டு செயலாளர்S.முத்துகிருஷ்ணன் முன்னிலையில் TV K பிரமுகர்கள் ஜவகர்,KC.தேவராஜ் பகுதி நிர்வாகிகள் S. கார்த்திகேயன், Y. சூரியா R.தீபக்,A.ஆகாஷ் G.சுபாஷ்,மகளிர் அணி S.கலைவாணி வார்டு நிர்வாகிகள் R.பூபதி, K.சிவபெருமாள், S.நடராஜ்,T. மனோகரன் மகளிர் அணி அமைப்பாளர்கள். S தாரணி,புஷ்பலதா,கவிதா,பாப்பா, ந்தினி மற்றும் கழகத் தொண்டர்கள் மைப்பாளர்கள் கலந்து கொண்டனர்..



# முதல்வர் பிறந்தநாளில் கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மருத்துவ முகாம்

## தவெக மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி ஜூன் 24

கிருஷ்ணகிரி பழையப்பேட்டையில் தவெக கட்சி சார்பில் தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் பிறந்தநாளினை முன்னிட்டு மருத்துவ முகாம் நடைப்பெ ப ற் ற து . கிருஷ்ணகிரி தவெக நிர்வாகி ஏஜாஸ் தலைமையில் கோட்டை உருதுப்பள்ளியில் நடைப்பெற்ற மருத்துவ முகாமிற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்ட மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ் குத்து விளக்கு ஏற்றி மருத்துவ முகாமினை துவக்கி வைத்தார்,

இந்த மருத்துவ முகாமில் மேற்கு மாவட்ட இணைச் செயலாளர் ஹரிஸ், மாவட்ட பொருளாளர் முருகேசன், வேப்பனபள்ளி மேற்கு ஒன்றிய செயலாளர் நாகராஜன், மாவட்ட மகளீர் அணி தலைவி இந்திரா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஹேமபிரியா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அருள்குமார், மருத்துவர் அணி அமைப்பாளர் பார்த்திபன், நகர கழகம் ஹரிபிரசாந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் கிருஷ்ணகிரி, பழையப் பேட்டை, காந்திநகர், ஜோமார் பேட்டை, உள்ளிட்ட பொதுமக்கள் ஏராளமானவர்களுக்கு, மருத்துவர்கள் மூலமக மருத்துவ சிகிச்சை முறைகள் மற்றும் மருத்துவம் குறித்த ஆலோசனைகளும் டாக்டர் உதயகுமார் டாக்டர் கே.காயத்ரி ஆகியோர் மூலம் வழங்கப்பட்டது. இந்த மருத்துவ முகாமில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அருள், வேப்பனப்பள்ளி ஒன்றிய செயலாளர்நாகராஜ், வேப்பனப்பள்ளி தெற்கு ஒன்றிய செயலாளர் அம்பரீஷ், மாவட்ட மகளிர் அணி தலைவி இந்திரா, செயற்குழு உறுப்பினர் ஹேமப்பிரியா இவருடன் கழக நிர்வாகிகளான தென்னரசு, வேலன், கோல்டன் சுரேஷ், சரவணன், ரேணுகுமார் , ஹேமந்த்குமார், ஜெய்ஆனந்த், டாக்டர் ஐயப்பன், மற்றும் தவெக கட்சியை சேர்ந்த அஸ்ஸலாம் பாஷா, சதாம் , முபாரக், ஜாகிர் உசேன், பாரூக் ஹராமத், ஷாகீர் ஹராமத், ஷால் மீன், ஆசிப், அப்பு, முபாரக் உள்ளிட்ட ஏராள மானவர்கள் கலந்துக் கொண்டனர்,



# தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

## தமிழக முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு விவேகானந்தா காது கேளாதோர் பள்ளியில் இரவு உணவு வழங்கப்பட்டது

தருமபுரி ஜூன் 24

தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் தமிழக முதலமைச்சர் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு தருமபுரி தர்மபுரி அடுத்த பீடமனேரியில் உள்ள விவேகானந்தா காது கேளாதோர் பள்ளியில் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விமல் ராஜ் தலைமையில் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது. இதில் இளைஞர் அணி அமைப்பாளர்கள் கோபி, முருகன், வினோத், ரமேஷ், திருப்பதி, ரம்யா தேவி, மைல்ஸ் மற்றும் மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர் தலைவர் தளபதி விஜய் பிறந்தநாளை முன்னிட்டு வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஆர். வேல்முருகன் தலைமையில் வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அருள்மிகு செல்லியம்மன் ஆலயத்தில் சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜை செய்யப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டது.

மேற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.கலைமதி, விருப்பாட்சிபுரம் பகுதி செயலாளர் ராமமூர்த்தி விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இதில் மாவட்ட கழக பொருளாளர் பிரசாந்த், அணைக்கட்டு ஒன்றிய செயலாளர் தனசேகர், தோட்டப்பாளையம் பகுதிச் செயலாளர் பாரத் மற்றும் கழக நிர்வாகிகள் ஆனந்த் பிரியா பூஜா சரளா லட்சுமி புஷ்பா அமலா யாமினி ராஜேஷ் சுகுமார் சிவசங்கர் அஜய் அரவிந்த் பிரேம் பரத் செல்வம் ஆனந்த் சாரதி வினோத் அன்பு சரண் ஆகியோர் கலந்து கொண்டனர்



வேலூர் மாவட்டம் தமிழக முதல்வர் திரு ஜோசப் விஜய் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 5552பேருக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது மாவட்ட செயலாளர் வேல்முருகன் தலைமை சரவணன் வீராசாமி முன்னிலை பாப்பு(எ)பிரேம்குமார் குமரன் உடன் சங்கர்சண்முகம் தயாளன் வெங்கடேஷ் ஆனந்த் சிலம்பரசி சக்தி சதீஷ்குமார் ரஞ்சித் அஜித் செல்வராஜ் ஜெய் கணேஷ் கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்

# சிந்தலக்கரை வெட்காளியம்மன் கோவிலில்

## ஆனிமாத மகா வேள்வி பூஜை சக்தி மாலை இருமுடி விழா



விளாத்திகுளம் ஜூன் 24.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சிந்தலக்கரை ஸ்ரீ வெட்காளியம்மன் காளிபரா சக்தி பீடத்தில் ஆனி மாத வேள்வி பூஜை சக்தி மாலை இருமுடி விழா மகாயாகம் நடைபெற்றது.வேள்வி விழா மகாயாக சாலையில் நம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பழ வகைகள்,உணவு தானியங்கள், உடைகள்,குழந்தை தொட்டில், கல்உரல், அம்மி,மாங்கல்யம், உணவு ஆகியவற்றை நடைபெற்ற மகாயாக சாலையில் செலுத்தி வழிபாடு நடைபெற்றது.அதனைத் தொடர்ந்து முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது, பின்னர் 42 அடி உயரம் கொண்ட வெட்காளியம்மனுக்கு பல பாலாபிஷேகம் மற்றும் எலுமிச்சைமாலை அணிவித்து சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. ஆனி மாத இருமுடி விழாவிற்கு வருட வருடம் பக்தர்கள் கூட்டம் அதிகமாக வருவதால், இன்று 2வது கட்டமாக விழுப்புரம், சென்னை, காஞ்சிபுரம்,திருவாரூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து முதற்கட்டமாக சுமார் 1000 க்கும் மேற்பட்ட விரதம் இருந்து காப்பு கட்டி இருமுடி கட்டி வந்த பக்தர்கள் பம்பை வாத்தியத்துடன் தங்களின் நேர்த்திக்கடனை செலுத்தினர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் போக்குவரத்து புறநகர் கிளை மாண்புமிகு தமிழக முதல்வர் ச. ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு கழகப் பொதுச் செயலாளர்ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர், N.ஆனந்த். MLA ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் . பி.முகந்தன் உத்தரவின்படி கிருஷ்ணகிரி நகர செயலாளர் சசிகுமார் தென் மேற்கு ஒன்றிய செயலாளர் வி.சந்திரசேகர் கிருஷ்ணகிரி போக்குவரத்து புறநகர் கிளை தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சி நிர்வாகிகள் சார்பாக கேக்வெட்டி பொதுமக்களுக்கு சாப்பாடு வழங்கினர்கள்

# பல் சமய நட்புறவு கழகத்தின் பல்லடம் ஒன்றிய கிளை சார்பாக

## தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் பிறந்தநாள் விழா!!



திருப்பூர்: ஜூன் 24

பல்சமயநட்புறவுகழகத்தின்பல்லடம் ஒன்றிய கிளை சார்பாகபல்லடம் அறிவொளி நகரில் சமுதாயக்கூடம் அருகில் தமிழக வெற்றிக் கழக தலைவர் சி. ஜோசப் விஜய் 52வதுபிறந்தநாள் விழா இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

ஒன்றிய கிளைச் செயலாளர் உபைது ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழகத்தின் வடகிழக்கு ஒன்றிய செயலாளர் அபூபக்கர் சித்திக் கலந்து கொண்டு இனிப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பல் சமய நட்புறவுக் கழகத்தின் தலைவர் ஷாஜஹான் மாவட்ட பொறுப்பாளர் அக்கீம் மாவட்ட இளைஞரணி தலைவர் உசேன் மாவட்டதுணைதலைவர்நூர்முஹம்மது மற்றும் நல்லூர்தமிழக வெற்றிக் கழகத்தைச் சார்ந்த அசரப்அலி, ஜியாவுல்லா மற்றும்தமிழக வெற்றி கழககத்தின் வடகிழக்கு ஒன்றிய கலை மற்றும் கலாச்சார அணி செயலாளர் ரபியுதீன்மாவட்ட மகளிர் அணி தலைவி மேகலா மாவட்ட மகளிர் அணி செயலாளர் சித்ரா மற்றும் ஒன்றிய மகளிர் அணி தலைவி சபீனாபானு ஒன்றிய மகளிர் அணி செயலாளர் சையத் அலி பாத்திமா ஒன்றிய மகளிர் அணி பொருளாளர் திவ்யா மற்றும் பல கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# முன்னாள் படை வீரர்கள் மற்றும் படையில் பணிபுரிவோரின் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சேலம், ஜூன் 24

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படை வீரர்கள்,அவர்களை சார்ந்தோர்கள் மற்றும் படையில் பணிபுரிவோர்,அவர்களை சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 25.6.2026 அன்று மாலை 5.00 மணியளவில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சேலம் மாவட்ட முன்னாள் படை வீரர்கள் மற்றும் படைவீரர்களை சார்ந்தவர்களும்தங்களதுகோரிக்கைகளைஇரட்டை பிரதிகளில் விண்ணப்பம் வாயிலாக நேரில் சமர்ப்பிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

# தருமபுரி மாவட்டத்தில்

## போதை பொருட்கள் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும் ஆட்சியர் அறிவுறுத்தல்




தருமபுரி ஜூன் 24

தருமபுரி மாவட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் சார்பில் பல்வேறு துறை அலுவலர்களுடனான கலந்தாய்வு கூட்டம் குறிஞ்சி கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருண் கபிலன் முன்னிலை வகித்தார்.

இதை தொடர்ந்து ஆட்சியர் கூறியதாவது.

தருமபுரி மாவட்டத்தில் அரசு மதுபானங்கள் சந்து கடைகளில் விற்பனை செய்யப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்ட முழுவதும் மலைப்பகுதிகளை ஒட்டி உள்ள கிராமங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் ,விற்பனை செய்வதை கண்காணிக்க வேண்டும். கல்வி நிலையங்களை ஒட்டி உள்ள கடைகளில் போதைப்பொருட்கள், புகையிலை பொருட்கள் விற்பனை செய்யக்கூடாது அவ்வாறு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கள்ளச்சாராயம் தடுப்பு மற்றும் போதை பொருட்கள் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும்.

சட்ட விரோதமாக அரசு மதுபானங்கள் விற்பனை செய்வதை தடுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வருவாய் துறையினர் மற்றும் காவல்துறையினர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். மேலும் அனைத்து பள்ளிகளிலும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பயன்படுத்துவதில்லை என்ற வாசகம் அடங்கிய பதாகைகள் வைக்க வேண்டும் . இது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உறுதி மேற்கொள்ள வேண்டும் இவ்வாறு ஆட்சியர் கூறினார். இந்த கூட்டத்தில் கலால் உதவி ஆணையர் கோபு , கபிலன், உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட நியமன அலுவலர் கைலாஷ் குமார் மற்றும் உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்த நாள் விழா:

## வடுகபட்டியில் தவெக சார்பில் மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள், ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட்டம்



பெரியகுளம் ஜூன்.24

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்த நாளை முன்னிட்டு அதனை கொண்டாடும் வகையில் தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடுகபட்டியில் உள்ள ஸ்ரீ மார்கண்டேயா நெசவாளர் நடுநிலைப் பள்ளியில் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களுக்கு நோட்டு, புத்தகங்கள், பேனா, பென்சில் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராம்பாண்டியன், லக்கி குழுமம் உரிமையாளர் சேக் அலி, பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் சபரி கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை தொடங்கி வைத்தனர். அதனை தொடர்ந்து பள்ளி வளாகத்தில் 52 மரக்கன்றுகள் நடப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடினர். இதற்கான ஏற்பாடுகளை தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் வெங்கடேஸ்வரன், சந்தோஷ்ராஜா ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். இவ்விழாவில் பெரியகுளம் நகர நிர்வாகிகள், வடுகபட்டி பேரூர் நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# பென்னாகரம் வட்டம்

## சந்தப்பேட்டை கிராம மக்கள் அடிப்படை வசதி செய்து தர கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு

தருமபுரி ஜூன் 24

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் மூங்கில் மடுவு ஊராட்சிக்கு உட்பட்ட சந்தைப்பேட்டை கிராமத்திற்கு எந்த ஒரு அடிப்படை வசதி இன்றி தவித்து வருவதாகவும், அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் சட்டத் தூண்கள் அறக்கட்டளை இயக்கம் உதவியோடு அடிப்படை வசதிகளை செய்து தரக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் கிராம மக்கள் புகார் மனு அளித்துள்ளனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து கிராம மக்கள் தெரிவித்ததாவது

எங்களுக்கு அடிப்படை வசதிகள், சாலை வசதி எதுவும் இல்லை ரொம்ப பாதிக்கப்படுகிறோம். குழந்தைகள் பள்ளிக்கு செல்ல முடியவில்லை, வீட்டு உபயோகிக்கப்படும் சிலிண்டர் எடுக்க முடியவில்லை எல்லாமே எங்களுக்கு பிரச்சனையாக உள்ளது. நோயாளிகளை அழைத்துச் செல்ல ஒரு ஆம்புலன்ஸ் கூட வர முடியாத நிலை, பிரசவத்திற்கு கூட கொண்டுட்டு போக முடியாத நிலை, நாங்க கட்டில் போட்டு அவர்களை அழைத்துச் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

25 ஆண்டுகளாக எந்த வசதிகளும் செய்துதரவில்லை, எங்க ஊரை மாவட்ட கலெக்டர் நேரடியாக ஆய்வு செய்து அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும். ஏற்கனவே 100 வீடுகள் இருந்த நிலையில் அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாததால் 50 வீடுகளில் வசித்த மக்கள் வெளியேறி விட்டனர். நாங்க இப்போ ஐம்பது வீடுகள் வசிக்கும் மக்கள் மட்டுமே இருக்கிறோம். எனவே உடனடியாக மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு செய்து எங்களுக்கு உடனடியாக அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால் எங்களுடைய அரசால் வழங்கப்பட்ட ஆவணங்களை ஒப்படைத்து விட்டு ஊரைவிட்டு செல்கிறோம் என தெரிவித்தனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு

## முதியோர் இல்லத்திற்கு உணவு வழங்கிய த.வெ.க நிர்வாகிகள்



கோவை ஜூன்:24

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொள்ளாச்சி ஜோதி நகர் பிரைட் ஹோம் முதியோர் இல்லத்திற்கு பொள்ளாச்சி பாலக்காடு சாலை ஆட்டோ சங்கம் சார்பில் உணவுகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சி பி.ஆர்.கே.குருசாமி தலைமையில் ஓகே முருகன், தளபதி பாலா, தர்மராஜ், ரகு, ஆட்டோ சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பெண் குழந்தைகளை காப்போம் திட்ட விழிப்புணர்வு

சேலம், ஜூன் 24

சேலம் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர்உரிமைதுறையின்சார்பில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்ட விழிப்புணர்வு தொடக்க விழா நடைபெற்றது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் கீழ் பெண் குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு குறைந்து வரும் பெண் பாலின விகிதத்தை தடுத்தல், பெண் குழந்தைகள் சம உரிமையோடு வாழ்வதையும் அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல், பெண்குழந்தையின்கல்வியை உறுதி செய்தல், சிறந்த எதிர்காலத்திற்கான தொழில் வழிகாட்டல் பெண் மற்றும் பெண் குழந்தைகளுக்கான திறன் மேம்பாடு, சிறுமியர் இடையே விளையாட்டு திறமைகளை அடையாளம் காண்பது போன்ற முக்கிய நோக்கங்களுடன் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற திட்டத்தில் 2026 2027 நிதி ஆண்டில் விழிப்புணர்வு வார விழா இன்று 23.6.2026 தொடங்கி 27.06.2026 வரை நடைபெற உள்ளது. சேலம் மாவட்டத்தில் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் தூதுவர்களாக முதல் கட்டமாக நியமிக்கப்பட்டுள்ள பள்ளி மாணவியர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் இந்த மாணவியர்கள் தங்களது பள்ளி மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கும் வகையில் இந்த திட்டத்தின் தூதுவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படும். குறிப்பாக சேலம் மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைவாக உள்ள பகுதிகளை தேர்ந்தெடுத்து பிறப்பு விகிதத்தை உயர்த்தும் நோக்கத்தோடு அங்கன்வாடி மைய அலுவலர்கள் தாய்மார்களுக்கு உரிய விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதே போன்று கல்வி துறையில் பெண் குழந்தைகளின் இடை நிறுத்தத்தை தவிர்த்து பெண் குழந்தைகளின் உயர் கல்வி தரத்தினை அதிகரிக்கும் நோக்கத்தோடு விளையாட்டு துறையில் தன்னம்பிக்கைகளை அதிகரிக்கும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது . பெண் குழந்தைகளின்கல்வி சமூக நலன் பொருளாதார மேம்பாடு தொடர்ச்சியான வளர்ச்சியை கருத்தில் கொண்டு தொடர் நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அதிகளவில் பெண்களே பணியாற்றி வருகின்றனர். பெண் குழந்தைகளுக்கும் சமமான வாய்ப்பினை பெற்றோர்கள் வழங்க வேண்டும். சமூகத்தில் இருக்கும் பழமையான கருத்துக்களை புறந்தள்ளி பெண் குழந்தைகளை போற்றி பாதுகாக்க வேண்டும். சேலம் மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு வீதம் குறைவாக உள்ள பகுதிகளில் தீவிர விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. பெண் குழந்தைகளின் பிறப்பை முழுமையாக ஏற்று சமூகத்தில் அவர்களின் வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் முன்னதாக பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்ட விழிப்புணர்வு உறுதி மொழியினை மாவட்ட ஆட்சித் தலைமையில் உறுதி மொழி ஏற்றனர். பெண் குழந்தைகளின் விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் போட்டிகள் நடத்தப்பட்டது. கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் மருத்துவ முகாமை பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற திட்டத்தின் கீழ் வரையப்பட்டுள்ள இலட்சினையை மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் பார்வையிட்டார்.

# நாகர்கோவிலில் மாவட்ட நிர்வாகம், போலீஸ் சார்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி: கலெக்டர், எஸ்பி பங்கேற்பு



நாகர்கோவில், ஜூன்.24

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையின் சார்பில் 'மாற்றம்' என்றதலைப்பில்விழிப்புணர்வுநிகழ்ச்சி நாகர்கோவிலில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின், முன்னிலை வகித்தார். கலெக்டர் குத்துவிளக்கேற்றி, போதைப்பொருள் எதிர்ப்பு லோகோ வினை அறிமுகப்படுத்தி, பள்ளி மாணவ மாணவியர்களிடையே பேசியதாவது: குமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை சார்பில், இளைஞர்களிடையே போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மாற்றம் என்னும் உன்னதமான புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் தொடக்க விழா மற்றும் விழிப்புணர்வு குறும்பட வெளியீட்டு விழா நடைபெற்றது.

நம்முடைய மாவட்டமானது கல்வியில் சிறந்து விளங்கி, பல அறிவார்ந்த ஆளுமைகளை உருவாக்கிய பெருமைக்குரிய மாவட்டமாகும். இத்தகைய சிறப்புமிக்க மாவட்டத்தில், போதைப்பொருள் என்ற சிறிய கரும்புள்ளியால் இளைஞர்களின் முன்னேற்றமும், மாற்றமும் தடைபட்டுவிடக் கூடாது என்ற உயரிய நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆலோசனையின் படி, இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் பேசினார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. ஆர்.ஸ்டாலின் பேசுகையில்:

போதைப் பழக்கம் முதலில் ஒழுக்கமின்மையை ஏற்படுத்தும். பின்னர் உங்கள் கல்வி திறனை பாதித்து இறுதியில் குடும்பத்தின் நம்பிக்கையை இழக்க வைத்து விடும். மாணவர்கள் தான் அந்த குடும்பத்தின் கலங்கரை விளக்கம். போதைக்கு அடிமையாகி விடுவதால் பெற்றோர்களின் கனவை சிதைத்து விடுகிறார்கள்.

மாணவர்களாகிய உங்களுடைய மனம் தடுமாறி விடாமல் நல்வழியில் சிந்தனையுடன் செல்ல வேண்டும். போதை பழக்கத்திற்கு எந்த விதத்திலும் அடிமையாகி விடக் கூடாது. அவ்வாறு அடிமையாகி விட்டவர்களை மீட்க காவல்துறையால் மட்டும் முடியாது. அனைவரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காக தான் இந்த மாற்றம் என்ற இயக்கம் தொடங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பேசினார்.

தொடர்ந்து மாவட்ட காவல்துறையினரால்தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு குறும்படத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர், காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் பார்வையிட்டார்கள். இந்த விழாவில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆரோக்கிய பிரின்ஸ் ராஜ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நமச்சிவாயம், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் சகிலாபானு, துறை அலுவலர்கள், காவல்துறையினர், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# ஜீவன் ரக்ஷா 2026ம் ஆண்டிற்கான விருது: குமரி கலெக்டர் அறிவிப்பு

நாகர்கோவில், ஜூன்.24

மத்திய அரசின் உள்துறை சார்பில் தைரியமான மற்றும் மனிதாபிமானம் மிக்க பணிகளைச்செய்து உயிர்காக்கும் முயற்சியில் ஈடுபட்டு, மனித உயிர்களை காத்த நபர்களுக்கு ஜீவன் ரக்ஷா பதக் தொடர் விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விருது 3 பிரிவுகளாக வழங்கப்படுகிறது. சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் மீட்பவரின் உயிருக்கு மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் உயிரைக் காப்பாற்றுவதில் வெளிப்படையான தைரியத்திற்காக வழங்கப்படுகிறது. உத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் மீட்பவரின் உயிருக்கு பெறும் ஆபத்தில் இருக்கும் சூழ்நிலையில் உயிரைக் காப்பாற்றுவதில் தைரியமான செயலுக்காக வழங்கப்படுகிறது. ஜீவன் ரக்ஷா பதக்கம் மீட்பவருக்கு உடல் காயம் ஏற்பட்ட சூழ்நிலையில் உயிரைக் காப்பாற்றிய செயலுக்காக வழங்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கண்ட செயல்கள் மூலம் ஒருவரின் உயிரை மனதாபிமான குணத்துடன் காப்பாற்றி இருந்தால் 2026ஆம் ஆண்டிற்கான ஜீவன் ரக்ஷா பதக்கம் விருதுக்கு விண்ணப்பிக்கலாம். 01.10.2024க்கு முன்னர் இச்செயல்களை புரிந்தவர்களுக்கு பொருந்தாது. ஆயுதப்படை பிரிவை சேர்ந்தோர் காவல் துறையின் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி சேவைத் துறையினர் ஆகியயோர் தம்முடைய பணிநேரத்தில் அல்லாமல் இத்தகைய சேவை புரிந்திருந்தால் விண்ணப்பிக்கலாம். மேலும் இச்செயல்களை புரிந்த தகுதிவாய்ந்த நபர்கள், மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான விபரங்கள் மற்றும் மீட்கப்பட்டவரின் விபரங்களை சுயவிபர படிவத்தில் பூர்த்தி (அதிகபட்சம் 250 வார்த்தைகள்) செய்து அனுப்பவேண்டும். 30.06.2026 தேதிக்கு பின்வரும் விண்ணப்பங்கள் தகவலின்றி நிராகரிக்கப்படும். மேலும் விபரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட சமூகநல அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.




# பெண்கள் முன்னேற்றம், சமூக பாதுகாப்பு ,பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, பணிபுரியக்கூடிய பெண்கள் பாதுகாப்பு, பாலியல் வன்கொடுமை தடுப்பு சட்டம் திறன் விழிப்புணர்வு

தஞ்சாவூர் ஜூன் 24

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் பெண்கள் முன்னேற்றம், சமூக பாதுகாப்பு, பெண் குழந்தை களின் பாதுகாப்பு, பணிபுரியக் கூடிய பெண்கள் பாதுகாப்பு, பாலியல் வன்கொடுமைகள் தடுப்பு சட்டம் குறித்து உள்ளூர் குழு மற்றும் உள்ளக குழு தலைவர், உறுப்பினர்களுக்கான திறன் விழிப்புணர்வு பயிற்சியினை மாவட்ட கலெக்டர் ரேவதி துவக்கி வைத்தார்

தஞ்சாவூர் மாவட்ட சமூக நல அலுவலகத்தின் மூலம் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், விழிப்புணர்வு திறன் மேம்பாடு பயிற்சி நடத்தப்பட்டது.பணி புரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தடுப்பு சட்டம் 2013 கீழ் செயல்படும் உள்ளூர் குழு மற்றும் உள்ளக குழு உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியினை மாவட்ட கலெக்டர் ரேவதி துவக்கி வைத்தார் .

நிகழ்ச்சியில் பள்ளி, கல்லூரி மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து உள்ளக புகார் குழு உறுப்பினர்கள் 100 பேர் கலந்து கொண்டார்கள்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக் டர் ரேவதி பேசிதாவது

பெண்கள் முன்னேற்றம் ,சமூக பாதுகாப்பு ,பெண் குழந்தைகளின் பாதுகாப்பு பணி புரியக்கூடிய பெண்களின் பாதுகாப்பு ,பாலியல் வன்கொடுமை தடுப்பு சட்டம் பற்றி கூறினார் மேலும் இன்றைய சூழலில் பெண்கள் பெண்களுக்கு வரக்கூடியவர்களில் பெண்கள் 17 விழுக்காடு இருந்து தற்போது 50 விழுக்காடாக உயர்ந்து அனைத்து துறை தலைமை பொறுப்பை பெண்கள் உயர்ந்து கொண்டு உள்ளார்கள் சமூகத்தில் நம்மை ஈடுபடுத்தி கொள்ளும் சமூகத்தில் பாதுகாப்புடன் வாழ உதவி செய்ய வேண்டும் என்ற இந்த குழுவிற்கு தலைமை இருக்கக்கூடிய ஒரு மூத்த தலைவர் பெண்மணியாக இருக்க வேண்டும் என்றும் உறுப்பி னர்கள் உண்மையானவர்களாக வும் ரகசியத்தை காக்க கூடியவர்க ளாகவும் தைரியமானவ ர்களாகவும் நடுநிலைமையை பின்பற்ற கூடியர்களாக சட்டத்தை நேர்மையாக சட்டப்படி நடவடிக்கை கட்டாயம் எடுக்கக் கூடியவர்கள் மட்டுமே இருக்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார் இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் லதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்




# பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தினர் உண்ணாவிரதம்

தஞ்சாவூர் ஜூன் 24

பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரி தஞ்சாவூரில் தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்

தலைமை தபால் நிலையம் அருகே நடைபெற்ற போராட்டத் துக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் எல். பழனியப்பன் தலைமை வகித்தார் மாநிலப் பொதுச் செயலர் கே. செந்தில் குமார் முன்னிலை வகித்தார் இதில், தேர்தல்அறிக்கையில் த. வே.க கொடுத்த வாக்குறுதியின் படி விவசாயிகளின் கூட்டுறவு பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு கட்டும் தடுப்பணைகள் மத்திய அரசு அனுமதி வழங்கக் கூடாது. காவிரி மேலாண் மை ஆணைய உத்தரவுப்படி காவிரியில் தமிழகத்துக்குரிய மாதாந்திரநீர்பங்கிட்டு உடனேவழங்க வேண்டும். விவசாயிகள் விளைவித்த நெல் மணிகளை தமிழக அரசு உரிய முறையில் பாதுகாக்க வேண்டும். குறுவை தொகுப்பு திட்டத்திற்கு கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண் டும். ஆழ்குழாய் மூலம் பயிர் சாகு படி செய்துள்ள விவசாயிகளுக்கு பயிர் கடன்களை உடனடியாக வழங்க வேண்டும். மத்திய அரசு உயர்த்தி உள்ள உரங்களின் விலையை திரும்ப பெற வேண்டும் வருகின்ற கொள்முதல் பருவத்தில் நெல்லுக்கு குவிண்டலுக்கு ரூபாய் 3500விலையை தமிழக அரசு அறிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியு றுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டது

போராட்டத்தில் தமிழ்நாடு காவிரி உழவர்கள் பாதுகாப்பு சங்க செயலர் சுந்தர. விமலநாதன், சங்கத்தின் மாவட்ட செயலாளர் எம் மணி, ரவிச்சந்திரன் தெற்கு மாவட்ட பொருளாளர் சௌந்தர் ராஜன், மாநகர செயலாளர் அறிவு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# திருவண்ணாமலை மான்குட்டை கிராமத்தில் கூழ் ஊற்றும் திருவிழா

திருவண்ணாமலை, ஜூன் 24

திருவண்ணாமலை மாவட்டம் மேல் நாச்சிபட்டு மான் குட்டை கிராமத்தில் கூழ் ஊற்றும் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் காளியம்மன், மாரியம்மன், கெங்கையம்மன் ஆகிய மூன்று தெய்வங்கள் கெரகமாக வேப்பிலை, பூமாலையாக ஜோடித்து ஊர்வலமாக எடுத்துச் சென்று ஊர் பொது மக்களுக்கு காட்சியளித்து பொதுமக்கள் கேட்கும் வரங்களை கொடுத்தும் ஊர் வலமாக எடுத்துச் சென்றனர்.

மேலும் இந்நிகழ்ச்சியின் கடைசியில் பொதுமக்கள் ஒருவருக்கு ஒருவர் மேல் கூல் ஊற்றி ஆடலுடன் திருவிழா முடிவடைந்தது. இந்த திருவிழாவானது வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.




## குரியன்விளை ஸ்ரீ பத்திரகாளி கோயிலுக்கு சொந்தமான

# திருமுடி நீதிமன்ற உத்தரவு படி கோயிலில் ஒப்படைப்பு

களியக்காவிளை, ஜூன்.24

கொல்லங்கோடு அருகே பாத்திமாநகர், குரியன்விளையில் உள்ள பத்ரகாளி கோவிலில் முன்காலத்தில் 3 திருமுடிகளுடன் தின பூஜை, திருவிழா, பரணேற்று உள்ளிட்ட பூஜைகளுடன் சிறப்பாக நடந்து வந்தது. நாளடைவில் கோயில் திருவிழா உள்ளிட்ட பூஜைகள் நடத்தப்படவில்லை. அப்போதைய கோயில் நிர்வாகிகள் கோயில் பூஜை உள்ளிட்டவைகளில் கவனம் செலுத்தப்படவில்லை. இந்த நிலையில் எப்போது கேட்டாலும் திரும்ப திருமுடிகள் தரலாம் என்ற உடன்படிக்கையுடன் நீலகேசி அம்மன் திருமுடி பார்திபபுரம் பார்த்தசாரதி அம்மன் கோயிலுக்கு கொடுக்கப்பட்டது. பத்திரகாளி அம்மன் திருமுடி மூவோட்டுகோணம்ஶ்ரீபத்திரகாளிஅம்மன்கோயிலுக்கு கொடுக்கப்பட்டது, கணபதி சிலை செங்கவிளை கணபதி கோயிலுக்கு கொடுக்கப்பட்டது.

\தற்போது சுமார் 65 வருடங்களுக்கு பிறகு உடன்படிக்கையின்படி இந்த திருமுடிகள் குரியன்விளை கோயில் சார்பில் கேட்கப்பட்டது. ஆனால் திருமுடிகள் கொடுக்கப்படவில்லை. சுமார் 30 வருடங்களாக மறுக்கப்பட்டு வந்தது. இதையடுத்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

\இந்நிலையில் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையின்உத்தரவு படி பார்த்திபபுரம் பத்திரகாளி அம்மன் கோயிலில் இருந்த திருமுடி நேற்று குரியன்விளை ஶ்ரீ பத்திரகாளி முடிப்புரை கோயிலுக்கு கொண்டு வரப்பட்டது. இதற்காக நேற்று குழித்துறை கோர்ட் ஆமினா மற்றும் புதுக்கடை போலீசாரின் பாதுகாப்புடன் திருமுடி ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கோயில் நிர்வாக தலைவர் விக்கிரமன் சுவாமி தலைமை வகித்தார். செயலாளர் சாந்தகுமார், பொருளாளர் சசி வக்கீல் செல்வகுமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். கோயில் தந்திரி நாராயண ராவ் வாசுதேவ், ஜோதிடர் சுகுமார்ஜி, ஒய்வு பெற்ற மின்சார வாரிய மேற்பார்வை பொறியாளர் பத்மகுமார், ஓய்வு பெற்ற தீயணைப்பு துறை அலுவலர் பிரதாபன் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆர். யோகேஷ் தலைமையில் தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கெஜ்ஜல்நாயக்கன்பட்டியில் கேக் வெட்டி ,நலத்திட்ட உதவி துப்புரவு பணியார்களுக்கு 100 நபர்களுக்கு மேல் வேஷ்டி ,சேலை, சட்டைகள் வழங்கப்பட்டு அரசினர் உயர்நிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு நோட் புத்தகங்கள் மற்றும் தட்டு வழங்கப்பட்டு 2000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் உடன் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கோபி, ஒன்றிய இளைஞரணி இணை அமைப்பாளர் பிரபாகரன், ஒன்றிய துணை செயலாளர் கவின், ஒன்றிய பொருளாளர் ரமேஷ் ஆகியோர் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.